# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C. 259/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | வசந்தா |
| Father's Name | : | . |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 23.06.2025.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 முதல் 6 எதிரிகள் ஆஜரில் இல்லை, குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் சத்துணவு கூடத்தில் வேலை பார்த்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது பக்கத்து நிலத்தை சேர்ந்தவர்கள். எனது ஊர்காரர்கள். கடந்த 24.07.2016ம் தேதி காலை 10.00 மணிக்கு புலப்பட்டு சக்தி நகரில் உள்ள எனது கழனி

நடவில் இருந்தது. நான் அப்போது வீட்டில் இருந்தேன். நடவுக்காக எனது மருமகள் பட்டியல் சாட்சி 3 நளினி கூலிக்கு ஆட்களை அழைத்துச்சென்றிருந்தார். அவர் எனக்கு போன் செய்து வரப்பை 1ம் எதிரி மணி மம்மட்டி எடுத்து மறிப்பதாக சொன்னார். நானும், எனது மகன் பட்டியல் சாட்சி 2 இளங்கோவனும் கழனியை நோக்கி ஓடினோம். 1ம் எதிரி மணியை ஏன் வரப்பை மறிக்கிறீர்கள் என்று கேட்டேன். 1ம் எதிரி உடனே கையில் வைத்திருந்த மண்வெட்டியால் எனது மகன் இளங்கோவனை அடித்தார். மணியின் இரண்டு பிள்ளைகள் பெரிய கம்பை எடுத்து வந்தார்கள். என்னையும், எனது மகன் இளங்கோவனையும் அடித்தார்கள். நீதிமன்றத்தில் உள்ள 3ம் எதிரி ஜீவாவும் அதில் ஒருவர். மற்றொரு நபர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. அப்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள 2ம் எதிரி அஞ்சலாட்சியின் அண்ணன் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லாத 5ம் எதிரி வெங்கடேசன் வந்தார். அவர் சைக்கில் சையினால் பட்டியல் சாட்சி 3 எனது மருகள் நளினியை தாக்கினார். 3ம் எதிரியின் மைத்துனர் நாராயணமூர்த்தி அங்கு வநதார் பட்டியல் சாட்சி 3 எனது மருமகளிடமிருந்து போனை பிடுங்கிகொண்டு வயிற்றின்மீது எட்டி எட்டி உதைத்தார். நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள 2ம் எதிரி அஞ்சலாட்சி எனது தலைமுடியை பிடித்து தரையில் இடித்து அடித்தார். எனது மகன் அடிப்பட்டு கீழே விழுந்துவிட்டார் எங்கள் கழனியில் நடவுக்காக வந்த நபர்கள் ஓடிவந்தார்கள். அவர்கள் வந்தவுடன் வழக்கின் எதிரிகள் அடிப்பதை நிறுத்திவிட்டார்கள். எதிரிகள் எங்களை பார்த்து இன்று தப்பித்துகொண்டீர்கள் இன்னொரு நாள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். பின்பு 108 ஆம்புலன்சை அங்கிருந்தவர்கள் அழைத்தார்கள் நாங்கள் வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தோம். அங்கு வந்த போலிசார் எங்களிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்கள் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.